**தம்புள்ள மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

தம்புள்ள மாநகர சபையின் 2021 திசெம்பர் 31உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு,காசுப் பாய்சல் கூற்று,முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் தம்புள்ள மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,000,000 பெறுமதியான 03 காணித் துண்டுகளின் பெறுமதி இரண்டு முறைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | இரு முறை கணக்கிடலை சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | வருமான செலவுக் கணக்கிலிருந்து வதிவழிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதிக்கு மீண்டும் தேய்மான ஒதுக்கீடு செய்ததால் ரூபா 33,466,805 ஆன தேய்மான செலவுகள் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டு முதல் தேய்மான செம்மையாக்களை சரிசெய்கிறேன் | சொத்துக்களின் பெறுமதியை வருமான செலவுக் கணக்கிலிருந்து பதிவழிப்பதால் மீண்டும் தேய்மானம் ஒதுக்கீடு செய்ய தேவையில்லை. |
| (இ) | மூலதன செலவினத்திற்காக உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டிய மீள்நிரப்பு தொகை ரூபா 10,429,918 இனால் குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | ஆண்டிற்குரிய செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | கடந்த ஆண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 2,532,400 ஆன கிடைக்க வேண்டிய 03 கணக்கு மீதிகள் மற்றும் ரூபா 1,044,620 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதியை உரிய அங்கீகாரமின்றி | ஏற்றுக் கொள்கிறேன். குறித்த பதிவேடுகளை மீள் பரிசீலனை செய்துஎதிர்வரும் ஆண்டின் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | அங்கீகாரம் கிடைத்த பின்னர் கணக்குகளில் செம்மையாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றியிருந்த தவறை மீளாய்வாண்டிலும் சரிசெய்திருக்கவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் நிலவிய ரூபா 46,969,866 ஆன 09 சொத்து விடயங்களையும் ரூபா 219,678,864 ஆன செலவின விடயமொன்றையும் ரூபா 767,009 ஆன வருமான விடயமொன்றையும் ரூபா 491,532 ஆன 14 செலவின விடயங்களின் பெறுமதியையும் நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்வரும் ஆண்டின் செம்மையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். | அனைத்து விடயங்களினதும் ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 27 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் ஓத்த அறிக்கை பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 63,990,523 ஆன இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்கு குறிப்புக்களை சரசெய்ய வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள்என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| உடன்படிக்கை கைச்சாத்திடாது 68 கடையறைகளை வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். | 40(1) (எ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.8 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| ஆளுனரின் அங்கீகாரமின்றி நகர முதல்வர் மற்றும் பிரதி நகர முதல்வரின் தனிப்பட்ட ஆளணியாக 08 பேர்களை ஆட்சேர்த்து ரூபா 2,761,000 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | ஆளுனரின் அங்கீகாரம் இல்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். | ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவுரூபா 13,485,175தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவுரூபா 19,286,030 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

தபுள்ள மாநகர சபையினால் அரச வங்கியொன்றில் பேணிச் செல்லும் நடைமுறைக் கணக்கில் போதிய மீதியொன்று இல்லாதிருக்கையில் செலவு செய்ததால் வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றிருந்ததுடன் அதன் காரணமாக மாதாந்தம் மேலதிக பற்று வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் முறையே ரூபா 762,308 மற்றும் ரூபா 970,829 உம், மீளாய்வாண்டில் ரூபா 1,704,091 உம் மேலதிக பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த மற்றும் மீளாய்வாண்டு இறுதியில்மொத்த வருமான நிலுவை முறையே ரூபா 34,180,764 மற்றும்ரூபா 53,884,471 ஆனதில் வருமான சேகரித்தலின் முன்னேற்றம் பலவீனமான நிலையில் காணப்பட்டது. நிலுவை வருமானத்திலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 7,019,092 தொகை அல்லது நிலுவையின் 21 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2011 ஆண்டில் செய்யப்பட்ட மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டில் 2795 வீதவரி அலகுகளிலிருந்து வீதவரி அறவிடப்படுகின்றன. கணிப்பீட்டின் மூலம் 1897 புதிய வீதவரி அலகுகளை இனங்கண்டிருந்ததுடன் அவை அனைத்தையும் மீள் மதிப்பிட்டு வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டை மீள்மதிப்பிடும் நடவடிக்கைகள் 2022 சனவரி மாதம் முதல் மேற்கொண்டதுடன் தற்போது அந் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக, அந் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்து வருமானத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கிறேன். | அனைத்து வீதவரி அலகுகளையும் மீள்மதிப்பிட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தபுள்ள பேரூந்து தரிப்பிட 103 கடையறைகளில் 81 மொத்த சந்தை கடையறைகள் மற்றும் விஹார சந்தி 10 கடையறைகள் உள்ளடங்களாக 194 கடையறைகளிலிருந்து மீளாய்வாண்டு ஆகஸ்ட் 31 திகதியளவில் குத்தகை பெறுனர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்த நிலுவை கடையறை வாடகை ரூபா 7,614,738 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021.08.31 திகதியன்று நிலவிய ரூபா 7,614,737.51 ஆன நிலுவை தொகையிலிருந்து 2021.09.01 முதல் 2022.01.12 திகதி வரை ரூபா 3,115,981.37 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் நிலுவை தொகையை செலுத்தாததன் மீது கடையறைகளை முத்தரையிடலும் செய்யப்பட்டுள்ளது. | நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தபுள்ள பேரூந்து தரிப்பிட 05 கடையறைகளை சேர்த்து தனி அலகாக அபிவிருத்தி செய்து குத்தகை வழங்குவதற்கான உடன்படிக்கை பத்திரத்தில் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதியை குறிப்பிட்டுள்ளாததுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியான கடந்த ஆண்டு திசெம்பர் 04 திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலத்தினுள் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. இதன் காரணமாக சபைக்கு அறவிட வேண்டியதான வாடகையை அறவிட முடியாதிருந்தது. | நாட்டில் நிலவிய சீரற்ற தொற்று நிலைமை காரணமாக 2021.04.30 திகதி முதல் 2021.06.30 திகதி வரை விதிக்கப்பட்ட பிரயாணத் தடை காரணமாக இப் பணிகளை உரிய காலத்தினுள் பூர்த்தி செய்ய முடியாது போனது. எதிர் காலத்தில் குத்தகைதாரர் ஊடாக பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | நிர்மாண பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியை உடன்படிக்கையில் இல்லாததால் உடன்படிக்கையின் 2(1) நிபந்தனை பிரகாரம் நடவடிக்கை எடுத்து வாடகை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | தபுள்ள பிரதேச சபையினால் மாநகர சபைக்கு ஒப்படைத்திருந்த 73 கடையறைகளிற்காக தபுள்ள பிரதேச சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்ட போதும், மாநகர சபை வெளித்தரப்பினருடன் உடன்படிக்கை கைத்தாத்திட்டிருக்கவில்லை. | கடிதம் மூலம் போன்றே என்னாலும், அறிவித்தல் செய்யப்பட்டதுடன் குத்தகைதாரர்கள் அனைவரும் அதற்கு பதில் வழங்கவில்லாதுடன் குறைந்த பட்சம் உடன்படிக்கை தயாரிப்பதற்குரிய ஆவணங்களையும், சமர்பிக்கவில்லை. | வெளித்தரப்பினருடன் புதிய உடன்படிக்கைகளிற்கு உடன்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பேரூந்து தரிப்பிட 17 கடையறைகளிற்கு உரிய ரூபா 2,896,495 ஆன நிலுவை டென்டர் கட்டணத்தை அறவிட்டிருக்காததுடன் இந்த மொத்த நிலுவையையும் கடந்த ஆண்டிற்குரியதாக காணப்பட்டது. | கொரோன தொற்று காரணமாக நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்த முடியாதிருந்தது. பின்னர் இனங்கண்ட கடையறைகளை முத்திரையிட்டு நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3.2 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மாநகர சபை கட்டளை சட்டத்தின் 226(1) உப பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் பொருப்புவாய்ந்த நபர்களிற்கு எதிராக என்னால் மீளாய்வாண்டினுள் ரூபா 227,709 பெறுமதியான 02 மிகை அறவீடுகள் விதிக்கப்பட்டன. கடந்த ஆண்டினுள் விதித்த மிகை அறவீட்டுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 433,774 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | ரூபா 225,065 தொக்குரியதாக ஒரு மிகை அறவீட்டாளரினால் மற்றும் ரூபா 227,709 தொக்குரியதாக இன்னுமொரு மிகை அறவீட்டாளரினால் முறையீடொன்றை சமர்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மிகை அறவீட்டை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | விவசாய பசளை உற்பத்தி கருத்திட்டத்திற்குரிய மதிப்பீட்டு எல்லையை விஞ்சி ரூபா 9,060,0000 ஆன வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் கருத்திட்ட நடவடிக்கைகளை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிளவிலும் ஆரம்பித்திருக்கவில்லை. | டொலரின் பெறுமதி உயர்வடைவதனால் மேலதிகமாக கொடுப்பனவு செய்ய நேரிட்டது. | கருத்திட்ட நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 95,238,842 ஆனதுடன் அதற்கு 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளிற்கிடையிலான கால வீச்சளவிற்குட்பட்ட மீதி ரூபா 36,962,557 உம் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமான நிலவும் மீதி ரூபா 4,481,962 உம் உள்ளடங்கியிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளை நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 252,550,949 ஆனதுடன் அதற்கு 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளிற்கிடையிலான கால வீச்சளவிற்குட்பட்ட மீதி ரூபா 12,697,272 உம் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவும் மீதி ரூபா 220,520,597 உம் உள்ளடங்கியிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| சுகாதார தொழிலாளி பதவிக்காக அங்கீகார ஆளணி 50 ஆன போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கடமையில் ஈடுபட்டிருந்த எண்ணிக்கை 75 ஆனது. அவ்வாறு 25 சுகாதார தொழிலாளர் பதவிகள் 03 ஆண்டுகளினுள் மிகையாக இருக்கும் போது 2019, 2020 மற்றும் மீளாய்வாண்டுகளில் பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்த அடிப்படையில் மேலும் 56 சுகாதார தொழிலாளர்களையும் ஆட்சேர்த்து சம்வளம் வழங்கப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுகளில் மாநகர சபியினால் வழங்கும் சேவைகள் விரிவாக்கம் திகம்பதஹ கழிவுப் பொருள் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காகவும் நகர எல்லையில் கழிவுகளை அகற்றுவதை முறையாக்கல் போன்ற நடவடிக்கைகளுக்காக ஆட்சேரக்கப்பட்டுள்ளனர். அதற்காக பொதுச் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அங்கீகார ஆளணியின் எல்லைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாநகர சபையின் 04 வாகனங்களிற்குரியதான விபத்து ஏற்பட்டு 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகளிற்கடையிலான கால வீச்சளவொன்று கடந்திருந்த போதும் குறித்த காப்புறுதி இழப்பீட்டுத் தொகையிலிந்து மீள்நிரப்பப்படாத ரூபா 412,306 ஆன நட்டத்தை உரிய பொறுப்புதாய்ந்த அலுவலரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | விசாரணைக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இயற்கை விவசாய பசளை உற்பத்தி கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் போது குறித்த உபகரணங்களை 2021 திசெம்பர் 31 திகதிக்கு ஒப்படைக்க முடியாது எனக் குறிப்பிட்டு குறைந்த வலைமணுவை நிறாகரித்திருந்ததுடன் அத்திகதியிற்கு வழங்க முடியுமென கூடிய பெறுமானத்திற்கு அறிவித்திருந்த விலை மணுதாரரை தெரிவு செய்து விலை மணு ஒப்படைத்திருந்ததால் நகர சபை நிதியத்திற்கு ரூபா 4,866,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. திசெம்பர் 31 திகதிக்கு அவ் உபகரணங்கள் அனைத்தும் கிடைத்திருக்காததுடன் குறித்த கருத்திட்டத்தை 2022 மே 19 திகதியளவிலும் ஆரம்பித்திருக்கவில்லை. | குறைந்தபட்ச விலை முன்வைத்த நிறுவனத்திற்கு உரிய திகதிக்கு வழங்கல் செய்ய முடியாததனாலும் 2021.12.31 திகதிக்கு முன்னர் கருத்திட்டத்தை முடிவுறுத்த வேண்டியதனாலும் அவ்வாறு செயற்பட முடியுமான நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நள்லாட்சியும்

### 4.1 துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாநகர சபை கடடளைச் சட்டத்தின் 272 பிரிவின் பிரகாரம் துணை விதி விதிக்க முடியுமாக இருந்த போதும் 2022 மார்ச் 31 திகதி வரை 10 விடயங்களிற்காக தயாரித்திருந்த துணை விதிகளை வர்த்தமானியில் வெளியிட்டிருக்கவில்லை. | வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மாநகர சபை கடடளைச் சட்டத்தின் 272 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபைக்கு எரிகருவியொன்றை ரூபா 13,250,000 இற்கு கொள்வனவு செய்ய பெறுகைகள் மூலம் தெரிவு செய்த வழங்குனர் சபை தீர்மானத்தின் மீது நிராகறிக்கப்பட்டிருந்தார். பூர்வ செயலாற்றலை சமர்பிக்காது மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின்றி இரண்டாம் வழங்குனர் சபை தீர்மானத்தின் மீது தெரிவு செய்யப்பட்டததனால் முதலாம் வழங்குனரின் விலையையும் விட ரூபா 6,168,615 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 08 டென்டர் நிபந்தனைகள் மீறி ரூபா 19.4 மில்லியனான புதிய கழிவுப் பொருள் எரிகருவி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் முடிவடைய முன்னர் பாரிய திருத்தங்களிற்குட்பட்டு அந்த எரிருவி பழுதடைத்து காணப்பட்டது. மீளாய்வாண்டு ஆகஸ்ட் 18 திகதி முதல் எரிகருவி முற்றாக செயலிழந்து காணப்பட்ட போது அதனை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஒப்பந்த காலம் முடிவடையாததால் வழங்குனரின் மூலம் திருத்த வேலைகளை செய்து பயன்படுத்த வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்குரிய இலக்குகள் பிரதமாணங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தெரிவு செய்து செயற்படுத்த மாநகர சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2017 இலக்கம் 19 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |